www.padippakam.com



# ஈழத்தவர் வரலாறு 9

## கி.மு. ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 1621ஆம் ஆண்டு வரை....


**-செங்கை ஆழியான்-**

### எல்லாளனிற்குப் பின்னர்

மாமன்னன் எல்லாளனின் 44 வருட நீதி நெறி தவறாத ஆட்சி கி.மு.101 இல் முற்றுப் பெற சிங்கள ஆட்சி அனுராதபுரத்தில் அரசோச்சத் தொடங்கியது. காமினியைத் தொடர்ந்து கி.மு. 44 வரை அனுராதபுர சிம்மாசனத்தில் சிங்கள மன்னர்கள் அமர்ந்திருந்தனர். வட்டகாமினி அனுராதபுரத்தில் ஆட்சி செய்தபோது உருகுணையில் தீசன் என்ற குறுநில மன்னன் ஆதிக்கம் பெற்றிருந்தான் எனத் தெரிகிறது. அவன் அனுராதபுரத்தில் ஆட்சி செய்த போது உருகுணையில் தீசன் என்ற குறுநில மன்னன் ஆதிக்கம் பெற்றிருந்தான் எனத் தெரிகிறது. அவன் அனுராதபுர மன்னனுக்கு எதிராக ஆட்சியுரிமை வேண்டிக் கலகம் செய்ததாகத் தெரிகின்றது. அதேவேளை உத்தரதேசத்தைச் சேர்ந்த ஏழு தமிழ்க்குறு நில மன்னர்கள் மாந்தை வழியாக அனுராதபுரத்தை நோக்கிப் படையெடுத்தனர். இந்த ஏழு தமிழர்களைப் பாண்டியர்களாக வரலாற்றாசிரியர் சிலர் குறிப்பர். மகாவம்சத்தில் எவ்விடத்திலும் இவர்களைப் பாண்டியர்களாகக் குறிக்கவில்லை. இலங்கையின் குறுநில மன்னர்கள் அனுராதபுர ஆட்சியை ஏற்காது கிளர்ச்சி செய்கின்ற நிகழ்ச்சிகள் இலங்கை வரலாற்றில் புதியனவன்று, தென்னிலங்கையில் தீசன் கிளர்ந்தெழுந்தபோது வடக்கே ஏழு குறுநிலத் தமிழ் மன்னர்கள் போர்க்கோலம் பூண்டனர். இவர்களோடு உருக்குணைத்தீசனும் சேர்ந்து கொண்டானெனத் தெரிகின்றது. இவர்கள் எண்மரும் சேர்ந்து ஆட்சியைத் தம்மிடம் ஒப்படைத்து விடுமாறு வட்டகாமினிக்கு ஓலையனுப்பினர். வட்டகாமினி, உருகுணைத்தீசனோடு சமாதானம் செய்து கொண்டான். ஏழு தமிழ்க் குறுநில மன்னர்களின் படைகளைத் தடுத்து நிறுத்தி வெற்றி கொள்ளில், அனுராதபுர ஆட்சியைத் தீசனிடம் ஒப்படைப்பதாக ஒப்புக்கொண்டான். இதனையேற்ற தீசன், தமிழ்ப்படையோடு மோதித் தோல்வியடைய நேர்ந்தது. உருகுணைப் படையை வெற்றி கொண்ட ஏழு தமிழ்குறுநில மன்னரின் படை அனுராதபுரத்தை நோக்கி விரைந்தது.

கொம்பகாலா என்ற விடத்தில் இரு படைகளும் சந்தித்து மோதிக் கொண்டன. வட்டகாமினி தோல்வியைத் தழுவி, பின்வாங்கி அரண்மனைக் கோடித்தன்னிரு மனைவியரையும் புதல்வனையும் ஒரு தேரில் ஏற்றிக் கொண்டு வேகமாக தப்பியோடினான். தமிழர் படை துரத்தியதால் தேரின் வேகத்தைக் கூட்டும் பொருட்டு பாரத்தைக் குறைப்பதற்காக, அவன் தனது இரண்டாவது மனைவி சோமாதேவியைத் தேரினின்றும் இறக்கி விட்டுத் தப்பி ஓடிவிட நேர்ந்தது. ஏழு குறுநிலத் தமிழ் மன்னரில் ஒருவன் சோமாதேவியைத் தன்னுடையதாக்கிக் கொண்டான். மற்றொருவன் புத்தரின் ஐயக்கலத்தை தன்னுடைமையாக்கிக் கொண்டான். இந்த இருவரும் தமது பிரதேசங்களுக்கு மீண்டு சென்றனர் எனவும் மிகுதி ஐந்து தமிழரும் அனுராதபுரத்தை 14 ஆண்டுகளும் 7 மாதங்களும் அரசாண்டனர் எனவும் அறியக் கிடைக்கின்றது. இந்த ஐந்து தமிழ் மன்னர்களாக புலகத்தன், பாகியன், பனையமாறன், பிளையமாறன், தாடிகன் என்போர் குறிப்பிடப்படுகின்றனர். இவர்கள் ஒருவர் மாறி ஒருவர் அனுராதபுரத்திலிருந்து அரசாண்டனர் என அறியப்படுகின்றது. இவர்கள் ஒருவரையொருவர் கொன்றே ஆட்சி புரிந்தனரென மகாவம்சம் குறிப்பிடுகின்ற போதிலும் இக்குறுநில மன்னர்கள் முறை வைத்து தமக்குள் அனுராதபுர சிம்மாசனத்தை அலங்கரித்தனரெனக் கொள்ளலாம்.

தாடிகன் அனுராதபுரத்தை ஆண்டபோது வட்டகாமினி மீண்டும் அனுராதபுரத்தைக் கைப்பற்றி மன்னனானான். தமிழ்க்குறுநில மன்னனால் கவர்ந்து செல்லப்பட்ட சோமாதேவியை மீளப்பெற்று தனது ராணியாக்கிக் கொண்டான். வட்டகாமினியின் ஆட்சி கி.மு. 17 வரை நிலவியது. அதன் பின்னர் கி.பி. 9 ஆம் ஆண்டுவரை சிங்கள ஆட்சி இலங்கையில் நிலவியதாக அறிய முடிகிறது. சோரநாகன் என்ற மன்னன் ஆட்சியிலிருந்த போது அவனது மனைவியானஅனுலாதேவியின் விபரீதக் காமஆசையால் ஆட்சி அதிகாரம் பகிர்ந்து கொள்ளப்பட்டது. அனுலாதேவி தனது கணவனை நஞ்சூட்டிக் கொன்ற பின் திசா என்பவனை மணந்து அவனை அரசனாக்கினாள். அதன் பின்னர் விசா, வாதுகன், தீசன், நீலியன் என ஒவ்வொருவராக மணந்து மன்னனாக்கிப் பின்னர் நஞ்சூட்டிக் கொன்று இறுதியில் தானே நாட்டின் தலைமையை ஏற்றுக்கொண்டாள். அவளது ஆசைக்கும் விருப்பத்திற்கும் 32 அரண்மனைக் காவலர் உட்பட்டனரென வரலாறு கூறுகிறது. வாதுகன், நீலியன் ஆகிய இருவர் தமிழராவர். இவர்கள் அனுலாவுடன் அனுராதபுரச் சிம்மாசனத்தில் அமர்ந்து ஆட்சி புரிந்துள்ளனர். ஒட்டு மொத்தமாக பார்க்கும் போது கிறிஸ்து தசாப்தத்திற்கு முந்திய வரலாற்றுக் காலத்தினை உள்ளடக்கிய 250 ஆண்டுகளில் மூன்றிலொரு பகுதியில் தமிழரின் ஆட்சி நடைபெற்றதைப் பாளி நூல்கள் கூறுகின்றன எனலாம்.




### சிங்கை நகர் அரசு

### புராதன பெயர்கள்

வரலாற்றுக் காலத்தில் யாழ்ப்பாண இராச்சியம் என்னும் பெயரால் நாம் அறியும் வட இலங்கை இராச்சியம் எப்போது தாபிக்கப்பட்டது என்பதைச் சரியாக அறிந்து கொள்வதற்கு இதுவரை சான்றுகள் கிடைக்கவில்லை என நவீன வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர். கல்வெட்டு ஆதாரங்கள், சாசன ஆதாரங்கள் இருந்தால் தான் இலக்கிய ஆதாரங்களின் மெய்மையை ஏற்றுக்கொள்ள முடியும் என்கின்றனர். பனையோலைகளில் எழுதிய நம் முன்னோர் செப்பேடுகளில் எழுதிப் புதைக்காது போயினராம். யாழ்ப்பாண இராச்சியத்தின் வரலாற்றைக் கூறும் மூலநூல்களாக கைலாயமாலை, வையா பாடல், யாழ்ப்பாண வைபவமாலை ஆகிய மூன்றுங் கருதப்படுகின்றன. இந்நூல்களின் அடியொற்றியும் இத்துறை சார்ந்த பல்வேறு நூல்களின் துணைகொண்டும் கல்வெட்டுக்கள், சாசனங்கள், அகழ்வாராய்ச்சியின் பெறுபேறுகள் என்பனவற்றை ஆதாரமாகக் கொண்டும் காலத்திற்குக் காலம் பல நூல்களும் கட்டுரைகளும் வெளிவந்திருக்கின்றன. யாழ்ப்பாண வைபவ கௌமுதி (க. வேலுப்பிள்ளை - 1918), யாழ்ப்பாண வைபவ விமர்சனம் (சுவாமி ஞானப்பிரகாசர் - 1928), யாழ்ப்பாணச் சரித்திரம் (ஜோண் - 1930), யாழ்ப்பாணச் சரித்திரம் (ஆ. மூத்துப்பிள்ளை - 1933), யாழ்ப்பாணச் சரித்திரம் (செ. இராசநாயகம் - 1933), TAMILS AND CEYLON (சி.எஸ்.நவரத்தினம்), THE NORTHERN KINGDOM (எஸ்.நடேசன் - 1960), யாழ்ப்பாண இராச்சியத்தின் தோற்றம் (கா. இந்திரபாலா- 1972), THE KINGDOM OF JAFFNA (ச.பத்மநாதன் - 1987), யாழ்ப்பாண இராச்சியம் (சி.க. சிற்றம்பலம் - 1994) பூநகரி தொல்லியலாய்வுகள் (ப. புஸ்பரட்ணம்) ஆகிய நூல்கள் இவ்வகையில் குறிப்பிடத்தக்கன.

பதின்மூன்றாம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து தான் வடவிலங்கையில் தோன்றிய அரசானது யாழ்ப்பாண இராச்சியம் என அழைக்கப்படுகிறது. பண்டைய வடவிலங்கை அரசு எவ்வாறு அழைக்கப்பட்டது? 'தமிழர் காலத்து வடவிலங்கையை யாழ்ப்பாணம் என்னும் பெயரால் வழங்குவது ஒரு கால வழுவாகும். தீவின் வடபாகத்தில் ஆட்சி நடாத்தியவனை யாழ்ப்பாணத்து மன்னனென்று கூறுவதும் சரியன்று என ஞானப்பிரகாசர் தனது நூலிற் கூறுகிறார். வட இராச்சியத்தின் வரலாற்றின் ஆரம்பத்தில் யாழ்ப்பாணம் என்ற பெயர் அதற்கு இருக்கவில்லை என்றே கூறவேண்டும். யாழ்ப்பாண இராச்சியத்தின் எல்லை மன்னாரிலிருந்து திருகோணமலை வரை வரைந்த கோட்டிற்கு வடக்கே பரந்த ஒரு பெரும்பிரதேசமாகும். வலிகாமம், தென்மராட்சி, வடமராட்சி, பச்சிலைப்பள்ளி, வன்னி நிலங்களும் பிற நிலங்களும் இதனுள் அடங்கியிருந்தன. சிலவேளைகளில் யாழ்ப்பாண இராச்சியத்தின் மேலாதிக்கம் கம்பளை வரை பரந்திருந்தது. சிலவேளைகளில் ஜயவர்த்தன கோட்டை வரை பரந்திருந்துள்ளது.

எனவே, யாழ்ப்பாண இராச்சியம் என்ற வடவிலங்கை இராச்சியத்தின் பண்டைய பெயர் என்ன? வடவிலங்கை நாகநாடு, சிங்கைநாடு (சிங்கை நகர்), மணவை (மணற்றி), ஈழம், உத்தரதேசம் என்று கூறப்பட்டது. உத்தரதேசத்தின் ஒரு பகுதியாக நாகதீவு அவ்வேளை இருந்தது. யாழ்ப்பாணக் குடாநாடு தீவு என்ற பெயருக்கேற்ப வரலாற்றுக் காலத்தில் பெருநிலத் தீவினின்னும் கடலால் பிரிக்கப்பட்டு ஒரு பெரிய தீவாக யாழ்ப்பாணக்குடாநாடு விளங்கியது. இன்று யாழ்ப்பாணக் குடாநாட்டை பெருநிலத்திணிவோட சுண்டிக்குள மணல் அணைஇணைத்துள்ளது. பண்டைநாளில் யாழ்ப்பாண - ஆனையிறவுக் கடனீரேரியூடாக கலங்கள் வங்காள விரிகுடாவில் பிரவேசித்துள்ளன. காலகதியில் மணல் படிந்த சுண்டிக்குள நுழைவாயில் அடைபட்டது.

(தொடரும்)

நவீன டிசைன்களில் அசல் 22 கரட் தங்க நகைகள். பட்டுப் புடவைகள். கூறைச் சேலைகள். பட்டு வேட்டிகள்.
ஆடவர். நங்கையர். குழந்தைகளுக்கான ரெடிமேட் உடுப்புக்கள். எவர்சில்வர் பொருட்கள். ஓடியோ–வீடியோ–சிடி. வார–மாத பத்திரிகைகள். சஞ்சிகைகள்.
மளிகை–மரக்கறி–கடலுணவு வகைகள்.
அனைத்தும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ள
ஆதவா ஆசியா சென்ரர்
TAUNUS Str.19
60329 FRANKFURT/ MAIN
TeL: 069/ 250361-2
Fax: 069/ 234045
ADAVAA ASIYA CENTAR

படிப்பகம்